**ஆர்ஷ வித்யா குருகுலம், ஆனைக்கட்டி, கோவை**

**திருமந்திரம் – ஓர் அறிமுகம் – வகுப்பு – 2**

**<u>தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்</u>**

1. பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.
முதல் தந்திரம் (காரணாகமம் – 1.உபதேசம்) 159

2. நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லவும்
ஊன்பற்றி நின்ற உணர் வுறுமந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப் படும்தானே 3-66

3. யாவர் க்குமாம் இறைவர் க்கொருபச்சிலை
யாவர் க்குமாம்பசுவுக் கொரு வாயுறை
யாவர் க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர் க்குமாம்பிறர் க்குஇன்னுரை தானே 109

4. அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர் ந்திருந்தாரே 257

5. தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர் ச்சிக்கத்தான் இருந்தானே 2328

6. மரத்தை மறைத்தது மாமத யானை

மரத்தின் மறைந்தது மாமத யானை

பரத்தை மறைத்தது பார் முதல்பூதம்

பரத்தின் மறைந்தது பார் முதல்பூதமே 2264

7. தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார் த்தைகேட்டல்

தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே 183

8. தத்பதம் த்வம்பதம் தானாம் அசிபதம்

தொல்பதம் மூன்றும் துரியத்துத் தோற்றவே

நிற்பது உயிர் பரம் நீள்சிவம் மூன்றில்

சொல்பதமாகும் த்வம் தத் அசியே 2460

9. ஓரெழுத் தாலே உலகெங்கும் தானாகி

ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்

மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை

மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே 865

10. தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்

ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே

மாற்றிக்களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்

கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே 216